முருகப்பெருமான் துணை

**மகான் குருபகவானை தொடர்ந்து**

**மகான் புதபகவான் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

25.06.2021, வெள்ளிக்கிழமை

1. அருள்மிக்க ஞான குருவே
அவதாரம் புரிந்த சூட்சும குருவே
இருள்நீக்கி உலகை மீட்க
இணையிலா சக்தியாய் வந்த
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
வள்ளலே உன் பெருமை கூறி
சிந்தைபட பிலவ மிதுன திங்கள்
செப்பிட லாப திகதி புகர் வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 11ம் நாள், 25.06.2021 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் யோகபிரசன்ன ஆசி
வழங்குவேன் புதபகவான் யானும்
சோரமின்றி மனித சமூகம்
சூட்சும சக்தி ஞானமும் தேறிட
4. தேறிட உயர் ஞானம் அருளும்
தேசிகனார் வழிகளை ஏற்றிட
ஆறுமுகனார் அருளும் ஆசியும்
அனைத்து மக்களும் அடைந்து
5. அடைந்துமே அழியாமைதனை பெறுவர்
அகில மாற்றம் செய்யும்படியான
தடையிலா சேவைகளை ஆற்றி
தவசியின் உயர் சீடர்களாகி
6. ஆகியே ஞானவான்கள் ஆவர்
அச்சுறுத்தும் பேரிடர்கள் தனை
அகிலத்தை விட்டு விரட்டும்படியான
ஆக்கபூர்வ தொண்டுகள் செய்து
7. செய்துமே உலகை காப்பர்
சிறப்பறிவு கூடி ஞானிகளாக
அய்யமற கலியில் உயர்ந்து
ஆறுமுகனார் தலைமை கொண்ட
8. கொண்ட ஞான ஆட்சி மலர
குறையிலா சேவை புரிவர்
தொண்டர் என்கின்ற நிலைகூடி
தெய்வநிலை மக்கள் அடைந்து

9. அடைந்துமே அறுபத்து மூவர் ஆழ்வார்கள்
அளவிலா சித்தரிஷிமார்கள் வரிசையில்
தடையின்றி உலகோர் இடம்பெறுவர்
தனித்துவம் பெற்று சிறப்பர்

10. சிறப்புதரும் இந்த மாற்றங்கள்
சிவராஜயோகி அரங்கன் வழி
மறுப்பின்றி உலகில் நடக்கவிருக்க
மக்களே காலம் கடத்தா

11. கடத்தா பிரணவக் குடில் அடைந்து
கருணை வடிவான அரங்கனை
தடையற ஒப்பு கொண்டு வர
தரணியே ஞானமாற்றம் காணும்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–